பி.ஏ.பி. அணைகளின் நீர்மட்டம்

சோலையாறு அணை (165 அடி)
நீர்மட்டம்: 92.24அடி
நீர்வரத்து: 3507.32கனஅடி
வெளியேற்றம்: 1152.58 கனஅடி

பரம்பிக்குளம் அணை (72 அடி)
நீர்மட்டம்: 29 அடி
நீர்வரத்து: 1733 கனஅடி
வெளியேற்றம்: 70 கனஅடி

பி.ஏ.பி. அணைகளின் நீர்மட்டம்

ஆழியாறு அணை (120 அடி)
நீர்மட்டம் : 55.70 அடி
நீர்வரத்து: 328 கனஅடி
வெளியேற்றம்: 106 கனஅடி

திருமூர்த்தி அணை (60 அடி)
நீர்மட்டம்: 35.09 அடி
நீர்வரத்து: இல்லை
வெளியேற்றம்: 26 கனஅடி

சொந்த கணக்கில் பணம் எடுக்க முயன்றவருக்கு வேறொருவர் கணக்கில் இருந்து வந்த ரூ.10 ஆயிரம்

ஏடிஎம் குளறுபடி குறித்து ஆட்சியரிடம் புகார்

■ கோவை

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர் முகாம் நேற்று நடைபெற்றது. ஆட்சியர் பவன் குமார் கிரியப்பனவர் தலைமை வகித்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் காந்திபுரத்தில் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வரும் இம்ரான் என்பவர் அளித்த மனுவில், ''நான் கடந்த 28-ம் தேதி ஒரு வங்கி ஏ.டி.எம். இயந்திரத்தில் ரூ.9 ஆயிரம் பணம் எடுக்க சென்றேன். ஆனால் எனது பணப்பரிவர்த்தனை தோல்வி அடைந்தது. அதே நேரத்தில் ஏ.டி.எம். இயந்திரத்தில் இருந்து ரூ.10 ஆயிரம் பணம் வெளியே வந்தது. அந்த பணம் எனது வங்கி கணக்கில் இருந்து வரவில்லை. தொழில்நுட்ப கோளாறு காரணமாக வேறு ஒருவர் வங்கி கணக்கில் இருந்து பணம் வந்துள்ளது.

இதையடுத்து, அந்த பணத்தை சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகளிடம் ஒப்படைக்க சென்றபோது, அவர்கள் வாங்க மறுப்பு தெரிவித்தனர். எனவே, இந்த பணத்தை பெற்றுக் கொண்டு அதற்கான ஒப்புகை சீட்டு வழங்க வேண்டும்'' எனக் கூறியுள்ளார்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற குறைதீர் முகாமில் ஆட்சியரிடம் மனு அளிக்க வந்த பொதுமக்கள். படம்: ஜெ.மனோகரன்

பன்னிமடையை சேர்ந்த மூதாட்டியான மங்குதாய்(84) என்பவர் ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஸ்ட்ரெச்சரில் படுத்தபடி, தனது மகளுடன் வந்து அளித்த மனுவில், ''எனக்கு சொந்தமான 2.45 ஏக்கர் நிலத்தில் கடந்த 40 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறோம். காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகள் தொல்லை காரணமாக கோடை காலங்களில் விவசாயம் செய்யாமல் இருந்தோம்.

இந்நிலையில் எனக்கு அரசு வழங்கிய அசல் பட்டாவை வேறு நபரிடம் கொடுத்து விட்டேன். அவர் அதனை தொலைத்து விட்டார். எனவே எனக்கு அசல் பட்டா வழங்குவதுடன், அந்த நிலத்திற்கான வரி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் கூறப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, நடைபாதை வசதி, மகளிர் உரிமைத்தொகை உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மொத்தம் 343 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர். அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சியில் ஆர்ப்பரித்து கொட்டும் வெள்ளம்

சுற்றுலா பயணிகளுக்கு தடை

■ வால்பாறை

வால்பாறை அருகே உள்ள அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சியில் நீர் வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் வால்பாறையில் இருந்து கேரள மாநிலம் சாலக்குடி செல்லும் வழியில் அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி உள்ளது. இந்த நீர்வீழ்ச்சிக்கு தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

கேரளாவில் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் சாலக்குடி வனப்பகுதியில் கன மழை பெய்து வருகிறது. இதனால் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக சாலக்குடிக்கு செல்லும் வழியில் உள்ள சார்ப்பா நீர் வீழ்ச்சியில் அதிகளவு தண்ணீர் கொட்டுகிறது.

கேரளாவில் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதால், வால்பாறையில் இருந்து சாலக்குடி செல்லும் வழியில் உள்ள அதிரப்பள்ளி அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இந்த தண்ணீர் சார்ப்பா நீர் வீழ்ச்சி வழியாக அதிரப்பள்ளி நீர் வீழ்ச்சிக்கு செல்வதால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. இதனால் அதிரப்பள்ளி வனத்துறையினரும், அம்மாநில போலீஸாரும் நீர் வீழ்ச்சியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதித்துள்ளனர். இதனால் இரு மாநில சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

'டிஜிட்டல் அரஸ்ட்' செய்ததாக கூறி முதிய தம்பதியிடம் ரூ.1.53 கோடி மோசடி

■ கோவை

கோவை மாநகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மூத்த குடிமக்கள் காப்பகத்தில் 75 வயது மற்றும் 70 வயதான தம்பதி வசித்து வருகின்றனர். இவர்களுக்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு அழைப்பு வந்தது.

அதில் பேசிய நபர், "சட்ட விரோத செயல்களுக்கு உங்களது வங்கிக் கணக்கில் இருந்து பணப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனால் உங்களை டிஜிட்டல் அரஸ்ட் செய்துள்ளோம்" எனக் கூறியுள்ளார். தொடர்ந்து வங்கியில் உள்ள பண விவரங்கள் குறித்து கேட்டறிந்து அவற்றை தான் கூறும் கணக்குக்கு அனுப்புமாறும், விசாரணைக்கு பின்னர் திரும்ப தரப்படும் எனவும் கூறியுள்ளார்.

இதை நம்பிய தம்பதி, சொந்த ஊரான சேலத்துக்குச் சென்று அங்குள்ள வங்கியில் இருந்து இரு தவணைகளில் ரூ.1 கோடியே 53 லட்சம் தொகையை மர்ம நபர்கள் கூறிய வங்கிக் கணக்குக்கு அனுப்பியுள்ளனர். ஆனால் பணம் திரும்ப வரவில்லை. தொலைபேசியில் பேசிய நபரை தொடர்பு கொள்ளவும் முடியவில்லை. இதுபற்றிய புகாரின்பேரில், கோவை மாநகர சைபர் கிரைம் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

ஏ.டி.எம். மையத்தில் திடீரென ஒலித்த எச்சரிக்கை அலாரம்

■ கோவை

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே, தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் ஏ.டி.எம். இயந்திரம் உள்ளது. இந்த ஏ.டி.எம். மையத்தில் இருந்து நேற்று காலை திடீரென எச்சரிக்கை அலாரம் ஒலித்தது. சுமார் 10 நிமிடங்களுக்கு மேல் அலாரம் ஒலித்தது. ஆட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ரேஸ்கோர்ஸ் போலீஸார், உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்துக்கு வந்து விசாரித்தனர்.

ஏ.டி.எம். மையத்துக்குள் யாராவது உள்ளனரா என சோதனை செய்தனர். ஒருவரும் உள்ளே இல்லை. போலீஸார் நடத்திய விசாரணையில், நேற்று ஆட்சியர் அலுவலகத்துக்கு பொதுமக்களுடன் வந்த ஒரு சிறுவன் ஏ.டி.எம். மையத்துக்குள் சென்று இயந்திர பட்டன்களை தாறுமாறாக அழுத்தியதால் எச்சரிக்கை அலாரம் ஒலித்தது தெரியவந்தது.

கோவையில் கிரில் தொழிற்பேட்டை 'கோஜிம்வா' வலியுறுத்தல்

■ கோவை

கோவை மாவட்ட கிரில் தயாரிப்பாளர்கள் நலச் சங்கத்தின் (கோஜிம்வா) மத்திய மண்டல செயற்குழு மற்றும் ஆலோசனைக் கூட்டம் கோவையில் நடைபெற்றது. நிறுவனத் தலைவர் திருமலை எம்.ரவி தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் வைரம் எஸ்.பெரியசாமி, பொருளாளர் பி.சண்முகம், கவுரவத் தலைவர் கா.சொ. மதியழகன், நா.ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், கிரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். கிரில் தொழிலுக்கென மாதந்தோறும் 500 யூனிட் இலவச மின்சாரம் வழங்க வேண்டும். கிரில் வடிவமைப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்த மாநகராட்சி எல்லைக்குள் தனி இடம் அல்லது கட்டிடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

கிரில் தொழிலாளர்களுக்கென தனி நலவாரியம் அமைக்க வேண்டும். உயர்ந்துவரும் மின்சாரக் கட்டணத்தை குறைக்க வேண்டும். மாநகராட்சி சார்பில் வசூலிக்கப்படும் தொழில் வரியை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
repkovai@hindutamil.co.in

வெள்ளலூரில் கட்டப்பட்டுவரும்

தெருநாய்களுக்கான கருத்தடை மையத்தில் ஆணையர் ஆய்வு

■ கோவை

வெள்ளலூர் குப்பைக் கிடங்கு வளாகத்தில் 15-வது மத்திய நிதிக் குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.46 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தெருநாய்களின் கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெருநாய்களை கொண்டுவந்து கருத்தடை செய்யும் காலத்தில் அவற்றை வைத்து பராமரிக்கும் இடம் தொடர்பாக கேட்டறிந்தார்.

மேலும், வெள்ளலூர் உரக்கிடங்கு வளாகத்தில் செயல்பட்டுவரும் உரம் தயாரிக்கும் மையம், மக்கும், மக்காத குப்பையை தரம் பிரிக்கும் மையம், வாகன எடை மேடை ஆகிய வற்றை மாநகராட்சி ஆணையர் பார்வையிட்டார்.

பூவிருந்தவல்லி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்
நகரமன்றம்/2026/அ நாள்:29.07.2026

மாநிலப்பேரிடர் மீட்பு நிதியத்தின் 2024-25 மற்றும் 2025-26 (Red Cross) நிதியிலிருந்து மிதிவண்டி பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் தகுதியுடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து 24.08.2026 தேதி மட்டும் மாலை 3.00 மணி வரை மின்னணு E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கும் விலைக்கு தகுதியான ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். இத்தேதியை ஒப்பந்தப்புள்ளி பதிவேடுகள் 24.08.2026 தேதிக்கு மேல் அன்று மாலை 3.00 மணி வரை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நிலை எதிர்பாராத விதமாக அலுவல விடுமுறை அறிவிக்கப்படுமாயின், அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். எவ்வித காரணமும் அல்லது முன்னறிவிப்புமின்றி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்க காரணங்களின் நிமித்தம் ஒதுக்கிவைக்கவோ அல்லது காரணம் ஏதும் தெரிவிக்காமல் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவோ முழு அதிகாரம் உண்டு. E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேடுகள் மின்னணு தரவு ஒப்பந்தப்புள்ளியாக மட்டுமே நிரவேற்கப்பட்ட காலத்திற்கு முன்னர் இணைய வழியாக செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர் தகுதி குறித்து விவரங்களை ஒப்பந்தப்புள்ளி பதிவேடுகளில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் இது குறித்தான விவரம் தேவைப்பட்டால் அலுவலக நாட்களில் மாலை 3மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நேரில் கட்டணம் செலுத்தி கொள்ளலாம். 30.08.2026 அன்று நகராட்சி அலுவலகத்தில் 11.00 மணியளவில் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி கூட்டம் நடைபெறும்.

ஒப்பந்தப்புள்ளி கோரும்பணியின் விவரம்

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீட்டு வரைவு (ரூ.இலட்சத்தில்)	முன் வைப்பு வரைவு 1% ரூ	பணிமுடிக்கும் காலம்	ஒப்பந்தகாரரின் நிலை
1	2	3	4	5	6
1	புதிருந்தவல்லி நகராட்சி பிள்ளை 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீரேற்றுக் தொட்டி கட்டும் பணி	193.00	மதிப்பீட்டு தொகையில் 1 %	1 வருடம்	வகுப்பு - I

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்ளும் ஒப்பந்தகாரர்கள் தங்கள் "டோக்கன் (E-Token) http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். ஒப்பந்தப்புள்ளியை ரத்தோ அல்லது நிராகரிக்கவோ புதிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

செ.ம.தொ.இ/2420/ஒப்பந்தப்புள்ளி/2026 ஆணையர் புதிருந்தவல்லி நகராட்சி

சுவாதீன அறிவிப்பு

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-யின் அதிகாரபூர்வ அலுவலராக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகளில், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்(கள்)/ இணை-கடன்தாரர்(கள்)-களுக்கு **கோரிக்கை அறிவிப்புகளை** அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** அதில் கீழ்காணும் பாக்கித் தொகை அத்துடன் கடனுக்கான வட்டி, செலவுகள், கட்டணங்கள், இதரவை, தொகை செலுத்தும் நாள் வரை மற்றும்/அல்லது உணர்த்துதல் வரை சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

வ. எண்.	கணக்கு எண்.	கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/அடமானதாரர்	13(2) அறிவிப்பு நாள்/ நிலுவை தொகை (ரூபாயில்) தேதி	நாள்/நேரம் & சுவாதீன வகை
1	48059440000174	1) M/s. கண்ணன், உரிமையாளர், J K Broilers and Mutton, த/பெ. ரங்கராஜ், 2) திரு. ரங்கராஜ், த/பெ. பொன்னயன்	25.05.2026, 20.05.2026 தேதியில் ரூ.14,74,394/-	31.07.2026 11.30 AM சிம்பொலிக் சுவாதீனம்

பாதுகாப்பு சொத்து விவரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வாடாவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, வாடாவள்ளி கிராமம், எஸ்.எப்.எண். 699/1, எஸ்.எப்.எண். 700/2, வருவாய் பதிவின்படி எஸ்.எப். எண். 699/1பி, எஸ்.எப். எண். 700/2பி, கதவு எண். 59, மொத்த பரப்பு 3472 3/4 சதுர அடி பின்வரும் **எல்லைகள் : 1) 717 1/2 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் எல்லைகள்: வடக்கு :** ரங்கப்பா கவுண்டர் சொத்து, **கிழக்கு :** பொன்னே கவுண்டர் மீதமுள்ள நிலம், **தெற்கு :** பி அட்டவணை வீடு, **மேற்கு :** கிழக்கு மேற்கு பாதை. **அளவுகள் விவரங்கள் :** கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் : 35 அடி, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம் : 35 அடி, தெற்கு வடக்கு கிழக்கு பக்கம் : 22 அடி, தெற்கு வடக்கு மேற்கு பக்கம் : 19 அடி. **2) 1886 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் எல்லைகள்: வடக்கு :** கிழக்கு மேற்கு பாதை, **கிழக்கு :** வீட்டு நிலம், **தெற்கு :** ரவலா கவுண்டர் அட்டவணை நிலம், **மேற்கு :** வீரபத்திரன் நிலம். **அளவுகள் விவரங்கள் :** கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் : 34 அடி, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம் : 36 1/2 அடி, தெற்கு வடக்கு கிழக்கு பக்கம் : 53 1/2 அடி, தெற்கு வடக்கு மேற்கு பக்கம் : 53 1/2 அடி. **3) 869 1/4 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் எல்லைகள்: வடக்கு :** பொன்னே கவுண்டர் மீதமுள்ள நிலம், **கிழக்கு :** ரவலா கவுண்டர் அட்டவணை நிலம், **தெற்கு :** கிழக்கு மேற்கு இட்டெரி, **மேற்கு :** தாசன் வீரபத்திரன் நிலம். **அளவுகள் விவரங்கள் :** கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் : 14 அடி, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம் : 16 1/2 அடி, தெற்கு வடக்கு கிழக்கு பக்கம் : 58 1/2 அடி, தெற்கு வடக்கு மேற்கு பக்கம் : 55 1/2 அடி மற்றும் அனைத்து அடிப்படை உரிமைகள் மற்றும் பாதை.

மேற்படி பாக்கித்தொகையை மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மேற்குறிப்பிட்டுள்ள தேதியன்று **சுவாதீனம்** செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட கடன்-தாரர்கள்/ இணை-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்துக்கள்/அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு** செலுத்தப்பட வேண்டிய பாக்கித்தொகை மற்றும் கடனுக்கான வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

இடம் : கோயம்புத்தூர்
நாள் : 03.08.2026

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

ஓம்காரா சொத்துக்கள் மறுகட்டமைப்பு பிரைவேட் லிமிடெட்
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பேரேட் அலுவலகம் : கோஹினூர் ஸ்கூயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. காட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை-400 028. Tel.: 022-69231111

[இணைப்பு - IV-A] [விதி 8(6)-யை பார்க்கவும்]
அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்-ஏலம் பொது அறிவிப்பு

பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6)-ன் விதிமுறைகளுடன் 2002-ஆம் ஆண்டின் ("SARFAESI Act") நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கத்தின்கீழ் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக Viswaa Fashions-ன் கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்கள், உத்தரவாததாரர்கள், அடமானம் வைத்தவர்கள் மற்றும் கூட்டாளிகளான திரு. R V கண்ணன், திரு. A K சுரேஷ், திரு. S K சண்முகம் மற்றும் திரு. V. நாராயணா ஆகியோருக்கும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரிடம் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டுள்ளன/பிணையாகப் பெறப்பட்டுள்ளன. இச்சொத்துக்களின் குறியீட்டு உடைமை, SARFAESI சட்டம் 2002-ன் பிரிவு 13(4)-ன் கீழ் ஓம்காரா சொத்துக்கள் மறுகட்டமைப்பு பிரைவேட் லிமிடெட் (இனி OARPL எனக் குறிப்பிடப்படும்)-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளது. OARPL-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்; எனவே, அச்சொத்துக்களை வாங்குவதற்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஏலப்புள்ளிகள் கோரப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரான OARPL-க்கு, சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்கள், உத்தரவாததாரர்கள், அடமானம் வைத்தவர்கள் மற்றும் கூட்டாளிகளிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகையை **28.02.2026 தேதியன்று ரூ.61,60,41,214/-** மற்றும் அதற்கான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவை வசூலிப்பதற்காக, ளுயுசுகுயுநுளுஜ சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் (4) மற்றும் அதற்கான விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி இச்சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். விற்பனையானது **"உள்ளபடியே" "இருப்பபடியே" "எது உள்ளதோ அப்படியே" மற்றும் "எந்தவிதப் பொறுப்புரிமை கோரலுக்கும் இடமின்றி"** ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் நடைபெறும். விற்பனை நிகழ்வு **08.09.2026 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை நடைபெறும் (ஏலப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம் 07.09.2026 அன்று மாலை 5:00 மணி வரை ஆகும்).**
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், அறங்காவலராக (ஓம்காரா PS 08/2018-19 அறக்கட்டளையின் அறங்காவலராகச் செயல்படும் தகுதியில்), இந்தியன் வங்கியிடமிருந்து 29.09.2018 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் மூலம், மேற்கூறிய கடனாளிகள்/கூட்டுக் கடனாளிகள்/ அடமானதாரர்கள்/ பங்குதாரர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களையும், அதற்கான பிணையங்களுடன் சேர்த்து கையகப்படுத்தியுள்ளது.
அசையாச் சொத்தின் விவரம், ஒதுக்கீட்டு விலை, முன்பணம் வைப்புத்தொகை மற்றும் அறியப்பட்ட வில்லங்கம் (ஏதேனும் இருந்தால்) பின்வருமாறு:

வ.எண்.	சொத்து விவரம்	ரிசர்வ் தொகை (ரூ.)	EMD	ஏல உயர்வு தொகை
1	குடியிருப்பு நிலம் மற்றும் ஸ்ட்ரச்சர் எஸ்.எப்.எண். 649/2ஏ மற்றும் 2சி, எண்.65, கோபி சாலை, புதுசுபாளையம், அரசு மருத்துவமனை எதிரில், நம்பியூர் கிராமம், கோபி தாலுகா, ஈரோடு மாவட்டம் 0.60 ஏக்கர்ஸ் (திரு.S.K. சண்முகம் அவர்களுக்கு சொந்தமானது)	3,09,07,000/-	30,90,700/-	10,00,000/-

மின்-ஏலம் நாள்	08.09.2026 at 11:00 am to 12.00 pm
ஏலத்தில் பங்கேற்பதற்கான கடிதம் / KYC ஆவணம் / EMD-க்கான சான்று ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்:	07.09.2026 till5:00 pm
பார்வையிடும் நாள்	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதியுடன், அலுவலக நேரங்களுக்குள் தொலைபேசி அழைப்பின் பேரில்
அறியப்படும் வில்லங்கம் விவரம்	அறியப்படவில்லை
OARPL-க்குத் தெரிந்த நிலுவையிலுள்ள வழக்குகள்	DRT: கோயம்புத்தூர் DRT-யில் தாக்கல் செய்யப்பட்ட MA எண் 134/14 SA: கோயம்புத்தூர் DRT-யில் தாக்கல் செய்யப்பட்ட SA எண் 827/2023
பணம் செலுத்துவதற்கான கணக்கு விவரங்கள்	பயனாளியின் பெயர்: Trustee of Omkara PS 08/2018-19 Trust, வங்கி பெயர்: Indian Bank, Mumbai கணக்கு எண்.: 50462709246, IFSC Code: IDIB000D001

இந்த அறிவிப்பானது, "பிணைய உரிமை (அமலாக்க) விதிகள், 2002"-ன் விதி 8(6)-ன் கீழ் கடன் பெறுநர்கள்/கூட்டுக் கடன் பெறுநர்களுக்கு வழங்கப்படும் முப்பது நாள் அறிவிப்பாகவும் அமைகிறது. விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, பிணையம் கொண்ட கடன் வழங்குநரின் இணையதளமான http://omkaraarc.com/auction.php-ஐப் பார்வையிடவும். ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் **http://www.bankeauction.com** என்ற இணையதளத்தையும் பார்வையிடலாம்.
ஏல முன்பணத்தைச் செலுத்தியுள்ள மற்றும் உள்நுழைவு அடையாள எண் மற்றும் கடவுச்சொல் உருவாக்குதல், விவரங்களைப் பதிவேற்றுதல், ஏல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல், மின்னணு ஏல நடைமுறை குறித்த பயிற்சி பெறுதல், உதவி தேவைப்படும் பங்கேற்பாளர்கள், மின்னணு ஏல சேவை வழங்குநரான M/s. C1 India Pvt. Ltd.-ஐத் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி உதவி எண்: +91-7291981124/25/26, உதவி மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, திரு. பாவிக் பாண்டியா, அலைபேசி: 8866682937, மின்னஞ்சல்: maharashtra@c1india.com. மேலும், சொத்து தொடர்பான ஏதேனும் சந்தேகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி திருமதி. ஷில்பா தல்வி அவர்களை 9920563583 என்ற எண்ணிலோ அல்லது shilpa.dalvi@omkaraarc.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :
1. இந்த ஏல விற்பனை http://www.bankeauction.com என்ற இணையதளம் வழியாக மின்-ஏலம் முறையில், ஏல ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படியும், அதில் விவரிக்கப்பட்டுள்ள நடைமுறையின்படியும் நடத்தப்படும்.
2. இணைய இணைப்பு, நெட்வொர்க் சிக்கல்கள், கணினி செயலிழப்பு, மின்தடை போன்றவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ("AO")/OARPL பொறுப்பேற்க மாட்டார்.
3. ஏலத்தின் எந்தவொரு கட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்தக் காரணமும் கூறாமலும், முன் அறிவிப்பு இன்றியும், ஏலப்புள்ளியை/சமர்ப்பிப்பை ஏற்கலாம